

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.02.2026) கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பேப்பர் மில்ஸ் சாலை, ரெட்டேரி சந்திப்பில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 1.61 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள குளிரூட்டப்பட்ட கொளத்தூர் பேருந்து நிறுத்தத்தை பயணிகளின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மேயர் திருமதி.ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் கலாநிதி வீராசாமி, கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.2.2026) பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க. நகர் மண்டலம், ரெட்டேரி சந்திப்பில் 25 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள நவீன பயணியர் நிழற்குடையை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மேயர் திருமதி.ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் கலாநிதி வீராசாமி, கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





2026 சட்டமன்றப் பொதுத் தேர்தலையொட்டி கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திட அமைக்கப்பட்ட குழுத் தலைவர் – கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. தலைமையிலான குழுவினர் நேற்று (23.02.2026) அண்ணா அறிவாலயத்தில் ம.தி.மு.க. நிர்வாகிகளுடன் தொகுதி உடன்பாடு குறித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.





2026 சட்டமன்றப் பொதுத் தேர்தலையொட்டி கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திட அமைக்கப்பட்ட குழுத் தலைவர் – கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. தலைமையிலான குழுவினர் நேற்று (23.02.2026) அண்ணா அறிவாலயத்தில் மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா தலைமையில் பொதுச் செயலாளர்கள் ப.அப்துல் சமது, ஜெ.ஹாஜாகனி, பொருளாளர் கோவை. ஈ.உமர் ஆகியோருடன் தொகுதி உடன்பாடு குறித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

# வெல்லும் தமிழ்ப் பெண்கள் !

## ‘ஸ்டாலினின் மகளிர் படை’ வீடு வீடாக பரப்புரை – நேற்று முதல் தொடக்கம்!



















**சென்னை, பிப். 24-**

**தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் வரலாற்றுச் சிறப்பு மிக்க வெற்றியை உறுதி செய்யும் பொருட்டு கழகத்தலைவர் முதலமைச்சர் அவர்களது வழிகாட்டுதலில் வாக்குச்சாவடி வாரியாக ஸ்டாலினின் மகளிர் படை வீடு வீடாக பரப்புரையை நேற்று (23.02.2026) முதல் தொடங்கியுள்ளது.**

திராவிடமாடல் அரசின் மகளிர் நலத்திட்டங்களான விடியல் பேருந்து பயணம், மகளிர் உரிமைத் தொகை, புதுமை பெண் திட்டம், தோழி விடுதி உள்ளிட்ட திராவிட மாடல் அரசின் எண்ணற்ற நலத்திட்டங்களைப் பற்றி ஒவ்வொரு வீட்டிலும் மகளிரிடம் ஸ்டாலினின் மகளிர் படையை சேர்ந்தவர்கள் பரப்புரை மேற்கொண்டு வருகின்றனர்.

மகளிர் உரிமைத் தொகையை முடக்க ஒன்றிய பாஜக அரசு மற்றும் அதன் கூட்டணிக்கட்சி அ.தி.மு.க. இணைந்து தீட்டிய சதியை முன்கூட்டியே அறிந்து முறியடித்து 1.31 கோடி குடும்பத் தலைவிகளுக்கும் மகளிர் உரிமைத் தொகை முன்பணம் ரூ.3000, கோடை கால சிறப்புத் தொகுப்பு ரூ 2000 என மொத்தம் ரூ.5000 வழங்கியதோடு, மீண்டும் தொடர உள்ள திராவிட மாடல் அரசில் உரிமைத் தொகை ரூ.2000 ஆக உயர்த்தப்படும் எனவும் முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார். இந்த செய்தி அனைத்து பெண்களிடமும் எடுத்துரைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. பெண்களை பயனாளிகளாக மட்டும் எண்ணாமல் தமிழ்நாட்டு வளர்ச்சியின் பங்குதாரர்கள் என முக்கியத்துவம் கொடுத்து செயலாற்றி வருகிறது ‘திராவிட மாடல்’ அரசு என்பது மகளிருக்கு முதலமைச்சரின் செய்தியாக தெரிவிக்கப்படுகிறது.

வெல்லும் தமிழ்ப்பெண்கள் - வீடுவீடான பரப்புரையின் முதல் நாளான நேற்று சுமார் 120 தொகுதிகளில் வீடு வீடாக சென்று பரப்புரை மேற்கொண்டனர் ஸ்டாலினின் மகளிர் படை உறுப்பினர்கள். அவர்களுக்கு அனைத்து தொகுதிகளிலும் பொது மக்கள் சிறப்பான வரவேற்பினை அளித்து வருகின்றனர். திராவிட மாடல் அரசு தொடர்ந்தால் தான் நலத்திட்டங்களும் தொடரும். ஒன்றிய பா.ஜ.க.வும் அதன் அடிமை டப்பா கூட்டணியும் பெண்கள் நலத் திட்டங்களுக்கு எதிரானவை என்று தமிழ்நாட்டு பெண்கள் அனைவரும் அறிந்தே உள்ளனர்.

தமிழ்நாட்டு பெண்கள் முழுக்க முழுக்க திமுக பக்கமே உள்ளனர் என்பது வெல்லும் தமிழ்ப் பெண்கள் - வீடுவீடான பரப்புரைக்கு கிடைத்துள்ள மாபெரும் ஆதரவின் மூலம் மீண்டும் உறுதியாகி உள்ளது.

